## புதிய நிதியிடல் மாதிரியின் கீழ் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் காசநோய் கூறு - 2016

புதிய நிதியிடல் மாதிரியின் கீழ் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் காசநோய் கூறின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்திற்கும் (ஜீஎவ்ஏரீஎம்) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 பெப்ரவரி 29 ஆம் திகதிய 857-எல்கேஏ-ரீ-எம்ஓஎச் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் இ(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கலிற்கு பொறுப்பாக உள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் துறைகளுடன் குறைவான சேவையளிக்கப்பட்ட பகுதிகளில் கூடுதல் கவனத்துடனான நடவடிக்கைகளை அதிகரித்து மேம்படுத்துவதன் ஊடாக நேரடி அவதானிப்பு சிகிச்சை குறுங்கால கற்கைநெறி (டிஓரீஎஸ்) நிகழ்ச்சித்திட்டத்தின் வினைத்திறனை முன்னேற்றுவதன் மூலம் இலங்கையில் காசநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் புதிய நிதியிடல் மாதிரிக்கான காசநோயின் தீவிரத்தை கட்டுப்படுத்துவதற்காக ரூபா 1,033.99 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 7.91 மில்லியன் தொகையானதுடன் முழுத் தொகையையும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும்

நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடை முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 04 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(இ) நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏனைய பதிவேடுகளிலுள்ள தகவல்களுடன் இணங்கியிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் விளைவுகள்

### 3.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 116.40 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 798,805 தொகையாகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விடயம் | 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | |
|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ரூபா |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 16,325 | 2,475,850 |
| காசநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 782,480 | 113,929,047 |
| | **798,805** | **116,404,897** |

### 3.2 காசுப்பாய்ச்சல் கூற்று

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| | 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | **ஐ.அ.டொலர்** | **ரூபா** |
| வெளிநாட்டு உதவி – மானியத்திலிருந்து பெறப்பட்ட காசு | 720,805 | 104,822,167 |
| உள்நாட்டு நிதியத்திலிருந்து பெறப்பட்ட காசு | 13,587 | 1,602,826 |

| | | |
|---|---|---|
| விலைமனு வருமானம் | 234 | 34,000 |
| வெளிநாட்டுப் பரிமாற்ற நட்டத்திற்கான சீராக்கங்கள் | (1,399) | - |
| நிகழ்ச்சித்திட்ட செலவினங்களிற்காக செலுத்தப்பட்ட காசு | (782,480) | (113,929,047) |
| | ------------ | ----------------- |
| ஆண்டிற்கான மிகை/ (பற்றாக்குறை) | (49,253) | (7,470,054) |
| வெளிநாட்டுப் பரிமாற்ற நட்டம்/ இலாபம் | - | - |
| செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு/ (குறைவு) | (35,690) | (5,412,688) |
| பெறவேண்டியவைகளில் அதிகரிப்பு/ (குறைவு) | (1,281) | (194,254) |
| பெறுமானத்தேய்வு | 63,628 | 9,649,938 |
| பணிக்கொடை | 38,921 | 5,902,908 |
| | ------------ | ---------------- |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு** | **16,325** | **2,475,850** |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| நிலையான சொத்துக்கள் | (16,325) | (2,475,850) |
| | ------------- | ---------------- |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(16,325)** | **(2,475,850)** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ தேறிய குறைவு** | **இல்லை** | **இல்லை** |
| **2016 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **-** | **-** |
| **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **இல்லை** | **இல்லை** |

## 4. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 4.1 கணக்கீட்டுக் குறைபாடு

உலகலாவிய நிதியத்திலிருந்து நேரடியாக பெறப்பட்ட ரூபா 61.35 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் மற்றும் ரூபா 65.40 மில்லியன் பெறுமதியான மருந்துகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 5. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 5.1 நிதிகளின் பயன்பாடு

நிதியங்களின் நிதியளிப்பு, மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட நிதிகள் மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| **மூலம்** | **மானிய உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை** | | **ஆண்டின் போது பெறப்பட்ட நிதிகள்** | | **2016 திசெம்பர் 31 இல் வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள்** | |
|---|---|---|---|---|---|---|
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| ஜீஎவ்ஏரீஎம் | 7.91 | 1,033.99 | 1.61 | 234.75 | 1.59 | 231.62 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 0.07 | 11.00 | 0.07 | 11.00 |
| **மொத்தம்** | **7.91** | **1,033.99** | **1.68** | **245.75** | **1.66** | **242.62** |
| | ==== | ===== | ==== | ===== | ===== | ===== |

**5.2 பௌதீக செயன்முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதிவு செய்யப்படாத நோயாளிகளை இனங்காண்பதற்காக பொது சுகாதார பரிசோதகர்கள், தாதிகள் மற்றும் வைத்தியர்களை பயிற்றுவிப்பதற்காக 201 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும் அருத்துவ நிலையங்களை நடாத்துவதற்குஅவர்களை தயார்ப்படுத்துவதற்கு அதற்கான சிகிச்சைகள் மற்றும் கவனயீர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குமாக மீளாய்வாண்டிற்கான நிகழ்ச்சித்திட்டத்தில் ரூபா 18.85 மில்லியன் தொகையான ஒதுக்கீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், 64 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 6.57 மில்லியன் தொகை மாத்திரம் செலவழிக்கப்பட்டிருந்தது. 510 பிரதேச பொது சுகாதார பரிசோதனைகளிற்காக மீளாய்வாண்டின் போது நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட 17 கவனயீர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் 07 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. 300 பொது சுகாதார பரிசோதகர்கள் கவனயீர்ப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், கடந்த 03 ஆண்டுகளின் போது 27,934 காசநோய் நோயாளிகள் பதிவு செய்யப்பட்டதுடன் அதில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 935 நோயாளிகளின் மரணம் பதிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், உரிய அமைச்சால் நோயாளிகளின் பதிவுகளை பராமரிப்பதற்கு பொறிமுறை இல்லாமை, அவர்களுடைய நோய்களை வெளிப்படுத்துவதற்கு நோயாளிகளின் தயக்கம் போன்ற காரணங்களால் காச நோயாளிகள் மற்றும் மரணங்கள் தொடர்பான தகவல்கள் உடனுக்குடன் கிடைத்திருக்கவில்லை.

(இ) உலக சுகாதார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட தகவலின் பிரகாரம், இலங்கையில் காசநோய் குறைபோனது 4000 நோயாளிகளை விட குறைவாகவிருந்ததுடன் காசநோய் பிரச்சனைகளை குறைப்பதற்கு வைத்தியசாலைகளில் சிகிச்சைக்கான வசதிகளை முன்னேற்றுவது தொடர்பாகவும் உத்தியோகத்தர்களிற்கு பல பயிற்சிகளை வழங்குவதற்கு பிரேரிக்கப்பட்டது. எனினும், உரிய பிரேரணையை அமுல்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 நிதிக் கட்டுப்பாடுகள் தொடர்பான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட உப கட்டுநிதிகள் தொடர்பாக பின்பற்றப்பட்ட உள்ளக கட்டுப்பாடுகள் மீதான குறைபாடுகள் கணக்காய்வில் அவானிக்கப்பட்டன. அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்பட்டன.

(i) 175 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட செயல்நிமித்த கட்டுநிதிகள் தொடர்பாக ரூபா 5.10 மில்லியன் கூட்டுதொகையான செலவழிக்கப்படாத மீதிகளது குறித்த நோக்கம் பூர்த்தி செய்த பின்னர் உடனடியாக தீர்ப்பனவு செய்ய வேண்டப்பட்டிருந்த போதிலும், 04 தொடக்கம் 120 நாட்கள் காலதாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ii) 35 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 2.09 மில்லியன் கூட்டுத்தொகையான செயல்நிமித்த கட்டுநிதி உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென்பதுடன் 04 நாட்கள் தொடக்கம் 210

நாட்கள் வரையிலான காலதாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 966,758 கூட்டுத்தொகையான உபகட்டுநிதியானது உரிய முறையில் மதிப்பீடுகளை தயாரிக்காமையால் ஏனைய 33 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 6.82 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 44,967 பெறுமதியான செயற்திட்டத்தின் நிலையான சொத்துக்கள் மீதான பௌதீக செம்மையாய்வு 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊழியர் சேமலாபம் நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்குரிய பங்களிப்புக்களை மேற்கொள்வதிலுள்ள காலதாமதத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 2.02 மில்லியன் தொகையான மிகையறவீடுகளானது செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது 80 ரீபீ உதவியாளர்களை உள்ளடக்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 60 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவையிலிருந்தனர். மாவட்ட கலாச்சார நிலையங்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் நுண்ணியல் நிலையங்களால் அமுல்படுத்த வேண்டிய நடவடிக்கைகளானது 20 ரீபீ உதவியாளர்களின் பற்றாக்குறையால் திருப்திகரமாக செயலாற்றியிருக்கவில்லை. 10 தோட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் 09 தரவு பதிவு செயற்பாட்டாளர்கள் பதவிகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்காததுடன் இது செயற்திட்டத்தின் சமூக செயற்பாட்டை அதிகளவில் பாதிக்கும் என அவதானிக்கப்பட்டது.